# இஸ்லாம் மித்திரன்.

# Islam Mittiran.

"லாஇலாஹ இல்லல்லாஹ்
முஹம்மதுறஸூலுல்லாஹ்"

புத். 1. { அறப்ஹு 1312 சுபான் மீ 1௳ ஞா. கி. / இங்கிலிஷ் ௵ 1895 ஜனவரி மீ 27௳ ஞா. கி. } இல 24


## "இஸ்லாம் மித்திரன்."

சர்வ தயாபரனாகிய அல்லாஹுத் தஆலாவின் திருஅருளால் இஸ்லாம் மித்திரன் என்னும் இப்பத்திர புத்திரனுக்கு இச்சங்கிலையுடனே ஒரு வருஷம் பூரணமாகிறது. இந்த ஒரு வருஷக்காலமும் நாம் இப்பத்திரிகையில் எங்கள் இஸ்லாம் மார்க்க விஷயங்களையும், அவ்லியாக்களின் சரித்திரங்களையும், கல்வி அபிவிர்த்திக்குரிய காரியங்களையும் எழுதி வந்தோம். நல்விஷயத்தில் மனஞ்செலுத்தி எங்கள் பத்திர புத்திரனைப் பெற்று வாசித்து வந்த மித்திரர்களுக்கு வந்தன மோச்சுகின்றோம்.

இவ் வருஷகாலக்கடைசியில் இப்பத்திரிகையின் மிகச்சில பிரதிகள் எமது கையொப்பக்கார மித்திரர்களுக்கு காலதாமதத்துடன் கிடைத்திருக்குமென்று நம்புகின்றோம். அப்படிக் காலதாமதப்பட்டதற்குக் காரணம் அச்செழுத்துக்கோக்கிய ஒரு வேலைக்காரனால் நிகழ்ந்த சில திருட்டுச் சங்கதியேயாம். ஆனால், இப்போது

ரவனுடைய நல்லுதவியால் வேறு வேலைக்காரர்களை யமைத்து வேலையை நடத்திவருகின்றோம். பிறகிட்ட 12 மாசங்களிலுங் கூடிய 24 பத்திரிகைகளையும் பெற்று வாசித்த ஏகதேசம் கைவிராப்பக்கார அபிமானிகளில் அநேகர் பற்றுதலோடு மித்திரனுக்குக் கைவொப்பப் பணமும் கேட்குமுன்னரே இறுத்துவிட்டார்களென்பதை மிகச் சந்தோஷமாக வெளிப்படுத்திச் சொல்லுகிறதோடு அவர்களுக்கு வந்தனமுஞ் சொல்லுகின்றோம். மேலும் இப்பத்திரிகைக்கு பணம் இறுக்கவேண்டிய சில பாக்கிமையோரும் பெரிய மனமமைந்து இறுத்துப் போடுவார்களென்று நம்பி அவர்களையலட்டாது அன்பாக நினைப்பூட்டுகின்றோம்.

உலகத்திலே பற்பல பாஷைகளைப் பேசுவோர் பலரிருக்கின்றார்கள். அவர்களில் தற்காலக் கல்வி கேள்விகளில் மேம்பட்டோரெனச் சொல்லப்படுவோர் ஐரோப்பியரே. ஐரோப்பியர் கல்வியில் மேம்பட்டு சந்ததிமடைந்திருந்ததற்கு முக்கிய கருவியாயிருந்தது யாது? புதினப் பத்திரிகையே. புதினப் பத்திரிகையிலே அவர்கள் சகல விஷயங்களிலும் மேலிட்டார்களென்றே கூறலாம். இந்தியா, இலங்கை முதலிய தேசங்களில் வசிக்குந் தமிழர், சிங்களவர் முதலிய இதர மதஸ்தர்களைப் பாருங்கள். கல்வியைக் கற்றுத் தேறாப்பியருக்கும் பின்னிடையாதவர்களாயிருக்கின்றார்கள். லண்டன் பட்டணத்துக்குச் சென்று படித்துப் பட்டங்களைப் பெற்று வந்திருக்கின்றார்கள். சிங்களவர் இவ்வளவு உயர்நிலையடைவதற்குக் காரணம் கல்வி. அக்கல்வி இவ்வளவு தூரத்திற் சிறந்ததற்குப் புதினப் பத்திரிகைகளே தூண்டுகோல்களாயிருந்திருக்கின்றன. இந்த ஒரு தீவுக்குள்ளே மாத்திரம் பேசப்படுகிற ஒரு சிங்களப் பாஷையில் ஏறத்தாள 30-40 பத்திரிகைகளிருக்கின்றன. எங்கள் சாதி சமயத்தவர் பேசுந் தமிழ்ப் பாஷையில இந்தியா, இலங்கை என்னும் இருதேசத்தவர்க்கும் மார்க்கப்பத்திரிகைக்குஞ், சமாச்சாரப் பத்திரிகைக்குமாகவிருப்பது ஒரே ஒரு பத்திரிகையே. இது வருத்தமன்றோ? இல்லாமல்லவோ? ஐம்பது, அறுபது லக்ஷஞ் சனங்களுக்கிடையில் எத்தனை பத்திரிகைகளிருக்கவேண்டும். பத்திரிகைகளை வாசியாது, அவைகளை வாசிப்பதே படித்தவர்களென்ற ஜனங்கள் சகிப்படைவார்கள். அப்படிப் பத்திரிகைகளில்லாதிருக்குங் குறையை யகற்றுமாறு இப்பத்திராதிபர் இஸ்லாம் மித்திரனைத் தொடங்கினோம். தொடங்கி இந்த இரு வருஷமும் புத்தக ரூபமாக நடத்தி வந்தோம். இதுகாறும் யாதொரு குறைவில்லாது நாம் வாக்குச் சொன்னபடி நிறைவேற்றிக்கொள்ள கிருபைபுரிந்த அல்லாஹுத்தஆலாவை

ப் பலமுறையுந் துதித்துப் புகழ்கின்றோம். இனிமேலும் அவனுடைய அருளையே வழிபார்க்கின்றோம்.

---

## ஞானம்.

ஞானமென்பது சர்வலோகத்திலும் வெளியான பொருட்களுடையவும் வெளியே தோற்றாத பொருட்களுடையவும் உள்ளமையை அறியும் அறிவு. ஐரோப்பியர் முதலியவர்களுடைய சாஸ்திரமெல்லாம் பொருட்களின் சில குணங்களையும் தத்துவங்களையும் அவர்களுக்கு விளங்கியமட்டில் அவைகளின் தாதுக்கள் அல்லது மூல வஸ்துக்களின்னவின்னதென்பதையும், அவைகளை மனிதர்கள் உபயோகப்படுத்தும் விதங்களையும் விளக்குகின்றனவேயன்றி சகலவற்றிற்கும் ஆதியான மூலவஸ்தின்னதென்று சொல்லாது அந்தக்கல்விமான்கள் அது தங்கள் ஆராய்வுக்குக்கிட்டவில்லையென்று சொல்லிவிட்டுவிடுகிறார்கள். அதை விளங்கித் தேடுகிறவர்கள் சூபியாக்கள். அவர்களை பரிதேவர்கள் ஆரிபீன்கள். ஆனால் மிகுதியானவர்கள் தவறிதல்லது ஞானமென்பது உலகசம்பத்துக்களையெல்லாம் விடமொழிந்தவர்களுக்குரியது. பக்கீர்கள் மஸ்தான்களுக்குடையது. அது ஒரு மறைவான அறிவு. அதை நாம் கவனிக்க வேண்டியதில்லையென்று விட்டுவிடுகிறார்கள். இன்னுஞ் சிலர் அதை விளங்கவிருப்பங்கொண்டு குணங்குடி மஸ்தான் முதலிய அல்லாகுத்தாலாவின் பேரில் ஆசைகொண்ட ஆஷிக்கீன்களுடைய பாடல்களையும். அறபுச் சொற்களைக்கொண்டும் பிழையான தமிழ்ச்சொற்களைக்கொண்டுங் கருத்தை அடலாக்கிய விளங்கக்கூடாதிஸாலர்க்கள் அல்லது புத்தகங்களையெடுத்து வாசித்து ஒன்றும் தெளிவுபடாமல் விட்டுவிடுகிறார்கள். செய்குமார்களிடம் ஈசிஞைத்துப் பெற்றவர்களிடம் பேசிப்பார்த்தாலும் அவைகளில் வருதம் பெயர்கள் விளங்காத அறபுச்சொற்கள் சிலவற்றைப் பாடமிட்டுக்கொண்டும் சில தமிழ்ப்பாட்டுகளைப் பாடமிட்டுக்கொண்டும் ஸ்லாமதிக்குவர்களைப்போல் பேசுகிறார்கள். அந்த இல்லமை விளங்குதற்காவது அதைக்கொண்டு தேடிக்குகிறதற்காவது அவர்களில் விருப்பத்தைக் காணோம். இன்னுஞ் சிலர் செய்குமார்களுடைய போதனைகளைப் பற்றிப்பிடித்துச் சில்காலம் தெண்டிக்கிறார்கள். பின்விட்டுவிடுகிறார்கள். நாலுபக்கமும் கோட்டமிட்டுப் பார்த்தால் நேர்மைத் தப்பெறுதவர்கள் மிகவுங்கொஞ்சம். ஆனால் அந்த பாதையில் தெண்டிப்பவர்களைக் காண்பதரிது. மற்றும் முஸ்லீம்களுடைய தேசங்களில் மசகூறான அவுலியாக்களும் விலாயத்துடையவர்களுமிருக்கிறார்கள். இலங்கையிலோ அவ்விதம் மசகூறோ

ருவருமில்லையென்று எண்ணுகிறோம். காலையிலும் மாலையிலும் வெள்ளிக்கிழமை இரவுகளிலும் "திக்று" செய்கிற கூட்டங்கள் எவ்வளவிருக்கின்றன? இவர்களுடைய வணக்கத்தின் ஆசையைப் பார்த்தால் இவ்வுலக வாழ்வை வெறுத்த ஆசிக்கீன்களிலும் மேலாயிருக்கிறது. அப்படியெல்லாம் வணங்குகிற வணக்கவாளிகளில் ஒரு அற்புதத்துவங்களும் வெளிக்கிடாதது என்ன? நாமிப்படிச் சொல்வது அநேகருக்குக் கோபத்தை யெழுப்பும், ஆனால் உண்மையை பேசுவதற்கு அச்சப்படவேண்டியதில்லை. நமது கருத்தாவது இப்படி வணங்குகிறவர்களில் அநேகர் பெருமையை விடாது எடுத்திருக்கிறார்கள். பெருமையானது நெருப்பு விறகைத் தின்பதுபோல, வணக்கத்தின் பலனைத் தின்றுவிடுகிறது என்பதுவே. மேலும், இந்த ஊருக்கு வரும் செய்குமார்களில் மிகுதம் பெயர்கள் இஸ்லாம பணத்துக்கு விற்கவருகிறவர்களா யிருக்கிறார்கள். அவர்கள் தங்கள் முரீதீன்களுடைய சலாமத்தை ஆசை வைத்தவர்களாய்க் காணவில்லை. ஆகையால் அவர்களுடைய அறிவால் பலன் மிகவுஞ் சொற்பம். ஆனால் செய்குமார்களுக்கு ஊண் தீனவேண்டும். காலங் கழிப்பதற்குப் பொருள் வேண்டும் அவர்கள் தொழில் செய்யாதவர்களானபடியால் முரீதீன்கள் உதவி செய்வது கடமை. ஆனால் செய்குமார்கள் தாங்களும் தங்கள் முரீதீன்களும் அல்லாஹுத்த ஆலாவின் அறிவினையும் பெறவேண்டுமென்று ஆசையையுடையவர்களாயும் தங்கள் சேவைகளை அல்லாஹுத்த ஆலா வாக்குச்சொல்லியபடி தருவானென்று உறுதியுடையவர்களாயுமிருந்தால் அவர்கள் விதைக்கும் அறிவென்னும் வித்து முளைத்தெழும்பும், பணம் பணம் என்று ஆவல்கொண்டு அவர்களினின்றும் வெளியாகிற அக்கினி ஆவி அந்த வித்தை அழித்துவிடும். ஆகையால் செய்குமார்கள் இவ்வுலக வாழ்வையை வெறுத்திருக்கவேண்டும். முரீதீன்களும் பெருமையை யெடுத்தெறிந்து தாழ்மை,பொறை யென்னுமுடையை யணிந்திருக்கவேண்டும். அப்படி யிருந்தால் செய்த வணக்கமெல்லாம் பலித்து வலிமார்களின் வழியைப் பின்பற்றக் கூடும். இதல்லாமல் மஸ்தான் கோலங் கொள்ளுவதும் ஞானம்பேசுகிறதும், உங்கள் சேகு பெரிய எங்கள் சேகு பெரிதென்று வாதாடிக்கொள்ளுதலும் வீணான காரியமாம். அல்லாஹுத்த ஆலாவின் கற்பனையை யெடுத்து விலக்கைத் தவிர்ந்து நடப்பதுவே பெரிய ஞானமாம். ஏவலை விட்டுப்போட்டு தன் யுத்திப்படி என்ன கோலமிட்டாலும என்ன தவஞ்செய்தாலும் பலியாது. ஆகையால், சறஉவின் விதிப்படி நடந்தோர் முத்தி பெறுவார்கள். இன்னம்,

## இஸ்லாம் மார்க்கம்.

—:0:—

இஸ்லாம் மார்க்கமானது விதிப்படிக் கொள்ளும் ஈமானையும் †இபாதத்தையும் உடையதாம். ஈமானாவது, அல்லாஹுத்தஆலா ஒருவன் உண்டென்றும், அவனுடைய மலக்குகள் உண்டென்றும், வேதங்கள் உண்டென்றும், றசூல்மார் உண்டென்றும், ஆகிறு உண்டென்றும், நன்மை தீமைகளைப் பற்றிய கற்பனை உண்டென்றும், மனவுறுதியுடன் வாயாற்சொல்வதாம். இஸ்லாம என்பதும இதுதான். இதைச் சார்ந்த கலிமா, தொழுகை ஜக்காத்து, நோன்பு, ஹஜ்ஜி ஆகிய ஐந்து கருமங்கள் உண்டு இவைகளே இபாதத்தாம். இவ்விதமான இந்த மார்க்கம்தான் நபி ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்கள் முதல் நமது நாயகம் நபி முஹம்மது சல்லல்லாகு அலைகிவ சல்லமவர்கள் வரையுமுள்ள நபிமார் அனைவருக்கும் உரியது. இதற்கு மாற்றமான எந்த மார்க்கமும குபிர் என்று சொல்லப்படும்.

இந்தமார்க்கத்து எடுப்பாகிய ஐந்து கருமங்களில் முதலாவதான கலிமாவாவது "லா இலாக இல்லல்லாஹு முஹம்மதுர்றசூலுல்லாஹி" என்று [வணக்கத்திற்கு பாத்திரனான ஆண்டவன் அல்லாஹ் ஒருவனேயன்றி வேறில்லை; முஹம்மது நபி அவனுடைய தூதர் என்னும் அதன் அர்த்தத்தை அறிந்து] மனவுறுதியுடன் வாயாற் சொல்வதாம். இவ்விதம் சொன்னவன் மூமினும் முஸ்லிமும் ஆவான்; சொல்லாதவன் காபிர். இஸ்லாம் ஆகும் ஒவ்வொருவனும் தன் ஆயுசுபரியந்தத்திற்கும் ஒருதரம் மேற்சொன்னபடி ஈமான் கொண்டு, இப்படி கலிமாசொல்வது கடமை. இப்படிச்சொல்வதும் பருவம் எத்தினவனும், புத்தியுள்ளவனுமாயிருந்தே சொல்லவேண்டும். இனி காபிராயிருப்பவன் இஸ்லாமாகவேண்டுமானால், அவன் முன்னிருந்த குபர்மார்க்கத்தை விட்டு நீங்கி மேற்சொன்னபடி ஈமான் கொண்டு கலிமா சொல்லவேண்டும். இஸ்லாமாயிருந்து காபிராய்ப்போன ஒருவன் மீண்டும் இஸ்லாமாகவேண்டுமானால், அவன் எதைக்கொண்டு காபிரானானோ அதை நிவிர்த்திசெய்துகொண்டு, மேற்சொன்னபடி ஈமானுடன் கலிமா சொல்ல வேண்டும்.

இரண்டாவதான தொழுகையாவது பருவம் எத்தினவனும் புத்தியுள்ளவனுமாகிய ஒவ்வொரு இஸ்லாமானவனும், இஸ்லாமானவளும், [பெண்கள் ‡ஹைலு, நிபாஸ் நாள் தவிர] நாள் ஒன்றிற்கு பஜறு, லுகறு, அஸறு, மகுறிபு, இஷா ஆகிய ஐந்து நேரங்களிலும் எவ்வித ஸ்திதியிலும்

† இபாதத்து, வணக்கம்.

‡ ஹைலு, ருதுகம்—நிபாஸ், பிரசவத்தீட்டு.

அல்லாகுத்த ஆலாவை வணங்குவதாம். இது பிரதிதினமும் பறுலு.

மூன்றாவதான ஜக்காத்தாவது, பருவம் எத்தினவனும புத்தியுள்ளவனும அடிமையல்லாதவனும கடன் இல்லாதவனுமாகிய ஒவ்வொரு இஸ்லாமானவனும, இஸ்லாமானவளும, தன்னுடைய எந்தச் செலவையும் நீக்கி இருநூறு * திர்ஹம் நிறையுள்ள வெள்ளியாவது இருபது † தீனர் நிறையுள்ள பொன்னாவது வேறொரு நாணயமாவது மீதியாயிருந்தால், நாற்பதுக்கு ஒன்று வீழுக்காடாக வருஷத்திற்கு ஒருதரம், ஸையிதும், பனிஹாஷிமும், பனிஹாஷிமுடைய அடிமையல்லாத இஸ்லாமான பகீர், மிஸ்கீன், ஜக்காத்தை வசூல்செய்கிறவன், உரிமையுடன் படிக்கைபிறந்துள்ள அடிமை, கடன்பட்டவன், பிரயாணஞ் செய்கிற ஏழை ‡ முஸாபிறு ஆகிய இவர்களுக்கு, பிரதிப் பிரயோஜனம் ஒன்றும் இல்லாதபடி அல்லாகுத்த ஆலாவுக்காக கொடுக்கிறேன் என்கிற நிய்யத்துடன் தானங்கொடுப்பதாம். இது பறுலு [பருவம் எத்தினவனும் புத்தியுள்ளவனுமாயிருப்பது. ஷாபிஈ மதஹபில் அவசியமல்ல. ஜக்காத்தை வாங்கிக் கொள்கிற எழுவகையாரில், புதிதாக இஸ்லாமானவனையுஞ் சேர்த்து எட்டுவகையார் என்பது அந்த மதஹபின் நியமம்.]

நாலாவதான நோன்பாவது, பருவமெய்தின புத்தியுள்ள இஸ்லாமான ஒவ்வொரு ஆணும் பெண்ணும், ஒவ்வொரு வருஷத்து றமளான் மாசம் முழுவதும [பெண்களுக்கு 0 ஹைலு * நிபாஸ் நாட்கள்தவிர] ஒவ்வொரு நாளும் கிழக்கு வெளிக்க முன்முதல் சூரியன் அஸ்தமிக்கும் வரையும் ஒன்றும் தின்னாமலும் குடிக்காமலும் புணராமலும் நோன்பை முறிக்கும் வேறு எதையுஞ் செய்யாமலும் அல்லாகுத்த ஆலாவுக்காக நோன்பிருக்கிறேன் என்கிற நிய்யத்துடன் உபவாசம் இருப்பதாம். இது பறுலு. பெண்கள் ஹைலு நிபாஸாயிருந்த நாட்கள் தீர்ந்தபின் அந்த ஒவ்வொரு நாள் நோன்பையும் ‡ களா செய்யவேண்டும்.

ஐந்தாவதான ஹஜ்ஜாவது, பருவம் எத்தினவனும, புத்தியுள்ளவனு

* திர்ஹம், ஒருவகைவெள்ளிநாணயம். அது, இங்கிலீஷ் இந்திய கால்ரூபாய் எடை.
† தீனர், மேற்படி பொன்னணயம். அது, ஒரு விராகன் எடை.
‡ முஸாபிறு, பிரயாணி.

0 ஹைலு, சூதகம்.
* நிபாஸ், பிள்ளைப்பேற்றுத் தீட்டு.
‡ களா, தவறிப்போனதைச் செய்தல்.

ம், சரீரசுகமுள்ளவனும், அடிமையல்லாதவனும், அவசியமான எந்தச் செலவையும் நீக்கிப் போகவரச்செல்லுஞ் செலவிற்குப் போதுமான செல்வமுள்ளவனுமாகிய ஒவ்வொரு இஸ்லாமானவனும், வழியில் அச்சமில்லாதிருந்தால் மக்காவுக்குப் போய், குறித்தகாலத்தில குறித்தசெய்கைகொண்டு குறித்த தானத்தைத் தரிசிப்பதாம். இது ஆயுசுமுழுவதற்கும் ஒருதரம் பர்லு.

மேற்சொன்ன ஆறுகாரியங்களாகிய ஈமானும், இந்த ஐந்து காரியங்களாகிய இபாதத்தும் அடங்கிய இஸ்லாம் மார்க்கத்திற்கு ஆதாரங்களாகிய ஒழுங்குகள் அநந்தம் இருக்கின்றன. அவைகளைக் கற்றறிந்து, ஒன்றையும் வழுவவிடாமல் நடந்துகொள்வதுதான் ஈமானுக்குப் பேறுதலாம். அப்படிப் பேணப்பட்ட ஈமான்தான் அகீதா என்றுசொல்லப்படும்.

இஸ்லாம் மித்திரர்களே, இதோ நாம் எடுத்துக் காட்டி விரித்த அகீதாவுக்கு மூலாதாரமான மேற்சொன்ன ஈமானையும், அதற்கு ஏற்றதுணையாகிய இபாதத்தையும் சறுகவிடாமல், காப்பாற்றி நடந்து ஈடேற்றம் பெற்றுக்கொள்வது சகல முஸ்லிம்களுக்கும் கடமை. அப்படியே அல்லாகுத்தஆலா நமது ஈமானைத் தரிபாடாக்கி இபாதத்திற்கும் நல்லுதவி செய்வானாக ; ஆமீன்

## றமளான் விரதம்.

—:o:—

எங்கள் இரட்சகராகிய முகம்மது நபி அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாம் அவர்கள் தங்களது திருத்தோழர்களை விளித்து, "எமது தோழர்களே! றமளான் மாசத்திற்கு றமளான் என்று பெயர் வைக்கப்பட்டது ஏன்?" என்று வினவினார்கள். அந்தத் திருவினாவுக்கு விடையாக "அல்லாஹுத்தஆலாவும் அவனுடைய திருத்தூதராகிய தாங்களுமே மெத்தவும் அறிந்தவர்கள்" என்று சொன்னார்கள். (நபிகள் நாயகம் எந்த ஒரு கருமத்தைப்பற்றிக் கேட்டகாலத்தும் இப்படிச் சொல்லுவதுதான் திருத்தோழர்களின் வழக்கம்) றமள என்கிறது கரிக்கிறது என்கிறதல்லவா? ஆனால் றமளான் என்று இந்த மாசத்துக்கு பேர் கொடுக்கப்பட்டது பாவங்களைக் கரிக்கிறதுபற்றியே என்று நபிகள் நாயகம் திருவுளம் பற்றினார்கள்.

சர்வ வல்லவனாகிய கர்த்தன் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களை நோக்கி, மூஸாவே! நான் என்னுடைய ஹபீபாகிய முஹம்மது நபி அவர்களின் உம்மத்துகளை யிரண்டு இருள் தங்கடஞ்செய்யாதபடி, அவர்களுக்கு இரண்டு ஒளியைக் கொடுப்பேன் எனத் திருவுளமானான் அப்போது மூஸா அலைஹிஸ்ஸலாம் அந்த இரண்டு ஒளியும் என்னவெ

ன்றுகேட்டார்கள். கபுறு (பிரேதக் குழி) க்குள்ளே உண்டாகிற இருளை அகற்றும்படி குர் ஆன் ஒளியைக் கொடுப்பேன். கியாமா என்னும் சகல ஜீவாத்துமாக்களும் உயிர்த்தெழும் நாளில் சந்திரன் சூரியன் யாதொரு ஒளிக்கருவிகளுங் கிடையாது. அந்த இருளடர் காலத்தின் இருளை நீக்கும்படி றளானின் ஒளியைக் கொடுப்பேன் என்று திருவுளமானான்.

## இஸ்லாம் மித்திரனும், இஸ்லாம் அச்சியந்திரமும்.

இஸ்லாம் மித்திரர்களே! சுத்த சத்திய பரிசுத்த மார்க்கமாகிய இஸ்லாம் என்னும் முத்தி மதசம்பந்தமாகிய கல்வி விஷயங்களை லோகோபகார்த்தமாய்ப் பரப்பவேண்டுமென்ற நாட்டங்கொண்டு ஓர் அச்சியந்திரசாலையை ஸ்தாபித்து, அதற்கு "இஸ்லாம் அச்சியந்திரசாலை" யென்று பெயர் கொடுத்து, அவ்வியந்திரசாலையிலிருந்து புறப்படும்படியாகவோர் பத்திரிகையையுமுண்டாக்கி, அதற்கு "இஸ்லாம் மித்திரன்" என்னும் பேரையுஞ் சூட்டி நடத்தி வந்ததில் நாயனுதவியால் ஒரு வருஷம் நிறைவேறப் பெற்றது. அப்பத்திரிகையை வாசித்து வந்தவர்கள் எம்மீது குற்றங்குறை கண்டிருப்பின் அவற்றை மன்னிப்பதோடு, அவர்கள் செலுத்தவேண்டிய கடமைகளையும் நிறைவேற்றுவார்களென்று நம்புகிறோம். இப்போது நாம் இந்தியா முதலிய தேசங்களுக்குப் பிரயாணப்படவிருப்பதால், நாமே இப்பத்திரிகையை நடத்திக்கொள்வது அசாத்தியமாமெனக் கருதி, பத்திரிகையை விடாமுயற்சியோடு நடத்திவரும்படி, தத்தஞ் செய்துகொண்டு எமது அத்தியந்த மித்திரரும் முஸ்லிம்நேச பத்திரிகையின் அதிபருமாகிய ம. ள. ள. ஸ்ரீ எம். எல். உதுமான் லெப்பை மரைக்கார் அவர்களுக்குச் சொல்லப்பட்ட அச்சியந்திரத்தையும் அதற்குடைய சகல தளவாடங்களையும் கொடுத்துப் போட்டோம். இனிமேல் "இஸ்லாம் மித்திரன்" பத்திரிகையினும், இஸ்லாம் அச்சியந்திரக் கருவிகளினும் சுயாதீனத்தை அவர்களதுபால் பொறுப்பித்தோம். ஆகையால், சொற்சுவை பொருளடக்கத்தோடு யார்க்கும் விருப்பத்தைக் கொடுக்கத்தக்க நடையாய்ப் பத்திரிகை அவர்களால் நடத்தப்படுமென்பதை இஸ்லாம் மித்திரர்களாகிய நமது நண்பர்களுக்கு அறியக் கொடுக்கின்றோம்.

மேலும், இப்பத்திரிகைக்குக் கையொப்பப் பணமிறுக்கவிருப்பவர்களும் மேற்படி இவ்வியந்திரசாலையைக் கையேற்றவருக்கே கொடுத்து றசீது பெற்றுக்கொள்ள வேண்டியது.

கடிதங்கள் முதலிய லிகித விஷயங்கள் யாவும் அவர் பேருக்கே இனி எழுதிக்கொள்ளவும் வேண்டியது என்பதை இத்தால் எம் வந்தனத்தோடு அறிவிக்கின்றோம்.

மு. அ. சாஹிபு சுல்த்தான்.